தினமலர்

கம்ப்யூட்டர் மலர்

டிசம்பர் 14, 2009 இதழுடன் இணைப்பு

விண்டோஸ் வேகம் பெற

இனியவை இருபது

இன்டர்நெட் வசதியுடன்

லைவ் டிவி

ட்ரான்ஸெண்ட் தரும்

64 ஜிபி மெமரி கார்ட்

இன்டர்நெட் வசதியுடன் லைவ் டிவி

டாட்டா டெலி சர்வீசஸ் நிறுவனம் உங்களுடைய லேப்டாப் மற்றும் டெஸ்க்டாப் கம்ப்யூட்டரில் டிவி நிகழ்ச்சியை லைவாகப் பார்க்கும் வசதியைத் தருகிறது. இந்நிறுவனம் வழங்கும் இன்டர்நெட் இணைப்பினைத்தரும் டாட்ட போட்டான் ப்ளஸ் (Tata Photon Plus) தற்போது டிவி பார்க்கும் வசதியுடன் தரப்படுகிறது. இந்த வசதியைப் பெற உங்கள் கம்ப்யூட்டர் அல்லது லேப்டாப்பில் வீடியோ ஸ்ட்ரீமிங் வசதி இருக்க வேண்டும். ஸ்போர்ட்ஸ், நியூஸ், பொழுதுபோக்கு மற்றும் அந்த அந்த இடங்களில் பிரபலமான சேனல்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவை



Browsing on TATA Photon+

ஒளிபரப்பப்படும் நேரத்திலேயே கிடைக்கும். இவற்றுடன் ஏற்கனவே ஒளிபரப்பான நிகழ்ச்சிகளும் பதிவு செய்யப்பட்டு, பட்டியலிடப்பட்டு தரப்படுகின்றன. இவற்றிலிருந்தும் நீங்கள் நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துப் பார்க்கலாம்.

டிவி சேனல் நிகழ்ச்சிகளை சந்தா கட்டிப் பெறலாம். மூன்று வகையான சந்தா முறை உள்ளது. ரூ.5 செலுத்தினால் ஒரு மாதத்திற்கு ஒரு சேனல் பார்க்கலாம். 10 சேனல்கள் அடங்கிய தொகுப்பு காண ரூ. 29 செலுத்த வேண்டும். அனைத்து சேனல்களையும் பார்க்க ரூ.75 செலுத்த வேண்டும். இவை தவிர டேட்டாவிற்கான தொகையை இன்டர்நெட் வசதிக்கு நீங்கள் தேர்ந்தெடுத்துள்ளபடி செலுத்த வேண்டும்.

உள்ளே

விண்டோஸ் வேகம் பெற இனியவை நாற்பது — பக்கம் 5
ஸ்ட்ராங் பாஸ்வேர்ட் எப்படி இருக்க வேண்டும்? — பக்கம் 9
ட்ரான்ஸெண்ட் தரும் 64 ஜிபி மெமரி கார்ட் — பக்கம் 20

வாசகர்களே...

உங்கள் கேள்வி, சந்தேகம், கருத்துக்களை அனுப்புகையில் அந்தந்தப் பகுதியின் தலைப்புகளை குறிப்பிடவும்.

கம்ப்யூட்டர் மலரில் இன்னும் என்ன தகவல்கள் வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பையும் எழுதுங்கள்.

கம்ப்யூட்டர் நூல்கள்

கம்ப்யூட்டர் தொடர்பான நூல், சி.டி.க்களை கம்ப்யூட்டர் மலரில் வெளியிட 2 பிரதிகளை அனுப்பவும்.

2009 ஜூனுக்கு பிறகு உள்ள சிடிக்களை மட்டும் அனுப்பவும். சி.டி.யை உருவாக்கியவர், தயாரித்த நிறுவனம், விலை, வெளியிட்ட நாள், கிடைக்கும் இடம் ஆகியவற்றை குறிப்பிடவும்.

தினமலர் – கம்ப்யூட்டர் மலர், 8, காசா மேஜர் ரோடு, எழும்பூர், சென்னை-600 008
computermalar@dinamalar.in

விண்டோஸ் 7

வரவேற்பும் வருத்தமும்

விண்டோஸ் 7 ஒரு மாதக் குழந்தைதான். இருப்பினும் அந்த தொகுப்பினைப் பயன்படுத்தும் வாசகர்கள் பலர் அவர்களின் அனுபவத்தினைத் தொலைபேசி வழியாகவும், கடிதங்கள் வாயிலாகவும் பகிர்ந்து கொண்டு வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருப்பூர் ஆகிய நகரங்களில் உள்ளனர். ஒரு சிலர் பெங்களூரிலிருந்தும் தொடர்பு கொண்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இதனை வரவேற்று சந்தோஷத்துடன் பயன்படுத்தி வருகின்றனர். ஒரு சிலர் மட்டுமே அதன் சில குறைகளைக் கூறினார்கள். என்ன இருந்தாலும் புதிய இந்த சிஸ்டத்தை வரவேற்கலாம். மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் விண்டோஸ் என்றைக்கும் வெளியான சில வாரங்களில் பல மாறுதல்களுக்கு உள்ளாகும். பல பேட்ச் பைல்கள் தரப்படும். தர விட்டுப்போன டிரைவர்கள் வழங்கப்படும். அதன் பின்னரே அதனை நாம் முழுமையாக ஆய்வு செய்திட முடியும். இருப்பினும் நம் வாசகர்கள் பகிர்ந்து கொண்டவற்றில் சிலவற்றை இங்கு பார்க்கலாம்.

தற்போது விண்டோஸ் 7 பயன்படுத்துபவர்களில் பெரும்பாலானவர்கள் விண்டோஸ் எக்ஸ்பி பயன்படுத்தி வந்தவர்களே. 18 சதவிதம் பேர் விஸ்டா பயன்படுத்தி வந்தவர்கள். 6 சதவிதம் பேர் இரண்டையும் பயன்படுத்தியவர்கள். 3 சதவிதம் பேர் பிற நிறுவன ஆப்பரேட்டிங் சிஸ்டங்களைப் பயன்படுத்தியவர்கள்.

புதிதாய் விண்டோஸ் 7 பயன்படுத்துபவர்களில் பலர் தங்களின் பழைய சிஸ்டத்திலிருந்து மேம்படுத்தி இதனைப் பெற்றுள்ளனர். ஒரு சிலரே புதிய கம்ப்யூட்டர்களில் விண்டோஸ் 7 தரப்பட்டு பயன்படுத்துகின்றனர்.

அப்கிரேட் செய்தவர்களில் பெரும்பாலானவர்கள், மிகவும் எளிதாக மேம்படுத்துதல் நடந்தது என்றே கூறுகின்றனர். பிரச்னைகள் என்று எடுத்துக் கொண்டால் டிரைவர்கள் சில தேவைப்பட்டதாகத் தெரிகிறது. அடுத்ததாக ஏற்கனவே பயன்படுத்திய சாப்ட்வேர்கள் சில இயங்க மறுத்தன. ஒரு சிலருக்கு சிஸ்டம் கிராஷ் ஆகி, புளு ஸ்கிரீன் ஆப் டெத் காட்டப்பட்டது.

ஆனால் இந்த பிரச்னைகள் எல்லாம், எந்த ஆப்பரேட்டிங் சிஸ்டம் புதியதாக கம்ப்யூட்டர்களில் பயன்படுத்தப்படும்போது வருபவையே. விஸ்டா மற்றும் எக்ஸ்பியிலும் இவை இருந்தன; ஆனால் விரைவில் சரி செய்யப்பட்டன. எனவே இதிலும் சரி செய்யப்படும் என எதிர்பார்க்கலாம்.

நம் வாசகர்கள் விண்டோஸ் 7 தொகுப்பில் வரவேற்று ரசித்த புதிய அம்சங்களைப் பார்க்கலாம். டாஸ்க்பார், சிஸ்டம் ட்ரே, விண்டோ டைலிங், டெஸ்க்டாப் தரும் ஏரோ பீக் காட்சி –– ஆகியவற்றை அனைவருமே குறிப்பிட்டுள்ளனர். மிகவும் உற்சாகமாக வரவேற்கப்பட்ட வசதி புதிய

டாஸ்க்பார் தான்.

அதிகம் வரவேற்பு பெறாத அம்சம் இந்த சிஸ்டத்துடன் தரப்பட்டுள்ள இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 8 தான். அடுத்ததாக ஹோம் குரூப் மற்றும் மீடியா பிளேயர் ஆகும். பலரும் இந்த மூன்றைப் பற்றி அதிகம் குறை பட்டுக் கொள்கின்றனர்.

விஸ்டாவில் அதிகம் வரவேற்கப்படாத யூசர் அக்கவுண்ட் கண்ட்ரோல், விண்டோஸ் 7–ல் விரும்பப்படுவதாகத் தெரிகிறது.

ஒரு சில குறைகளைக் கூறியவர்களிடம் பொதுவான ஒன்றை அறிய முடிந்தது. குறிப்பிட்ட ஒரு குறையைப் பற்றிக் கூறிவிட்டு,

விண்டோ எக்ஸ்பி அந்த விதத்தில் சிறந்தது என்றே கூறுகின்றனர். அதில் ஏற்பட்ட சந்தோஷமும் நிறைவும் கூட விண்டோஸ் 7 மீது குறை சொல்ல வைத்திருக்கலாம் என்றே தோன்றுகிறது.

விண்டோஸ் 7 தொகுப்பில் விண்டோஸ் மெசஞ்சர், மூவி மேக்கர், லைவ் மெயில் ஆகியவை இல்லை. இவற்றைப் பயன்படுத்தாதவர்களுக்கு இது இல்லாதது பிரச்னை இல்லை.

பழைய பிரிண்டர்கள் மற்றும் பல இணைப்பு சாதனங்களுக்கான டிரைவர்கள் இந்த தொகுப்பில் இல்லாதது, இவற்றைப் பயன்படுத்துவதைத் தடுக்கிறது. இது களையப்படவேண்டும்.

மேலும் இந்த டிரைவர் புரோகிராம்களில் பாதுகாப்பு காரணங்களுக்காக டிஜிட்டல் சிக்னேச்சரை விண்டோஸ் 7 எதிர்பார்க்கிறது. எனவே ஆறு ஆண்டுகளுக்கு முன்பு வந்த டிஜிட்டல் பிரிண்டர் அல்லது வெப் கேமரா வைத்திருந்தால் சிக்கல் தான்.

பல புதிய யூசர் இன்டர்பேஸ்களை நாம் அறிந்து கொள்ள வேண்டிய கட்டாயத்தை விண்டோஸ் 7 ஏற்படுத்துகிறது. ஜம்ப் லிஸ்ட், ஒன் கிளிக் வை–பி, ஹோம் குரூப் மற்றும் டிவைஸ் ஸ்டேஜ் ஆகியவற்றை இங்கு குறிப்பிடலாம். ஆனால் இவை எல்லாம் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இருப்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

விண்டோஸ் 7 அதிகப் பாதுகாப்புடன் அமைக்கப்படும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் வைரஸ்களின் பாதிப்பு இதன் மீதும் எளிதாக ஏற்படுகிறது என்பதே உண்மை என இந்த வகையில் இதனை சோதனை செய்தவர்கள் கூறுகின்றனர். ஆனால் இன்னொன்றையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். மற்ற விண்டோஸ் பதிப்புகளில், வைரஸிற்கு எதிரான பாதுகாப்பு புரோகிராம் இணைக்கப் பட்டிருந்தது. விண்டோஸ் 7ல் அந்த மாதிரி எதுவும் இல்லை.

ஆனால் பொதுவாக எல்லோரும் குறிப்பிட்ட குறை, விலை தான். விண்டோஸ் 7 சிஸ்டம் விலை இன்னும் குறைக்கப்பட வேண்டும் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர். சிலருக்கு ஏன் விலையில் இத்தனை வேறுபாடு உள்ளது எனக் குறை காண்கின்றனர். பலர் விலை குறைந்த பின்னர் வாங்கிப் பயன்படுத்தக் காத்திருக்கின்றனர்.

எல்லாம் போகப் போகச் சரியாகிவிடும் என்றே கூறவேண்டும்.

கூடுதல் பயன் இருந்தால், குறைகள் உறுத்தாதே.

விண்டோஸ் வேகம் பெற இனியவை இருபது

விண்டோஸ் 95, 98, 2000, எக்ஸ்பி, விஸ்டா, விண்டோஸ் 7 எனப் பல நிலைகளில் ஆப்பரேட்டிங் சிஸ்டங்களை மைக்ரோசாப்ட் தந்தாலும், அவை இயங்கும் வேகம் இன்னும் அதிகமாக இருக்க வேண்டும், சிறிது கூடக் குறையக் கூடாது என்பதுதான் நம் விருப்பமாக எந்தக் காலத்திலும் உள்ளது. தொடக்கத்தில் உள்ள ஒரு சிஸ்டத்தின் வேகம் போகப் போகக் குறைவது பலருக்கு ஏமாற்றத்தைத் தருகிறது. இதில் இந்த சிஸ்டங்களைப் பயன்படுத்துபவர்களின் கவனக் குறைவும் உள்ளது. அவையும் சேர்ந்தே சிஸ்டத்தின் வேகக் குறைவிற்குக் காரணமாய் அமைந்துள்ளது. ஒரு சில நடவடிக்கைகளை மேற்கொண்டால் நிச்சயம் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தினை புயல் வேகத்தில் இயங்க வைக்கலாம் என்பதே உண்மை. அந்த சில நடவடிக்கைகளை இங்கு காணலாம். இந்த நடவடிக்கை குறித்த டிப்ஸ்கள், சிஸ்டம் வடிவமைப்பவர்கள், சிஸ்டம் அட்மினிஸ்ட்ரேட்டர்கள், நெட்வொர்க் அட்மினிஸ்ட் ரேட்டர் மற்றும் ஹெல்ப் டெஸ்க் வல்லுநர்கள் எனப் பலரிடம் திரட்டியவை. நீங்களும் இவற்றை முயற்சித்துப் பாருங்களேன்.

1. ஹார்ட் டிஸ்க்கின் சுழற்சி, அதன் மூலம் பைல் தேடும் நேரம் ஆகியவை சிஸ்டம் இயங்குவதில் முக்கிய இடத்தைக் கொள்கின்றன. எனவே சிதறலாகப் பதிந்த பைல்களை ஒருமுகப்படுத்தும் டிபிராக் செயல்பாட்டினை மேற்கொள்ளுங்கள். விண்டோஸ் இணைந்து வரும் டிபிராக் பைல் அல்லது ஸ்மார்ட் டிபிராக் (SmartDefrag) போன்ற மற்றவர்கள் தந்துள்ள புரோகிராம்களை இதற்குப் பயன்படுத்தலம். இந்த புரோகிராம் பெற http://www.online-tech-tips.com/free-software-downloads/free-defrag-menter/ என்ற முகவரி யில் உள்ள தளத்தை அணுகவும். ஹார்ட் டிஸ்க் என்று பொதுவாக இல்லாமல் விண்டோஸ் பேஜ் பைல் மற்றும் ரெஜிஸ்ட்ரியைக் குறிப்பாக டிபிராக் செய்திட வேண்டும்.

2. தற்காலிக பைல்கள் உருவாக்கம் நம் ஹார்ட் டிஸ்க்கின் இடத்தை எடுத்துக் கொண்டு அதன் பைல் தேடும் செயல்பாட்டினைத் தடுக்கும். எனவே டெம்பரரி பைல் போல்டர், ரீசைக்கிள் பின், ஹைபர்னேஷன் போன்ற போல்டர்கள் மற்றும் டைரக்டரிகளில் உள்ள தற்காலிக பைல்களை நீக்க வேண்டும். Treesize போன்ற புரோகிராம்களின் உதவி கொண்டு எந்த புரோகிராம்கள், பைல்கள் உங்கள் டிஸ்க்கில் அதிக இடம் எடுத்துக் கொண்டுள்ளன என்று பார்த்து செயல்படவும். இந்த புரோகிராமினைப் பெற http://www.online-tech-tips.com/computer-tips/treesize-free-utility-to-find-view-and-free-up-hard-disk-space/ என்ற முகவரியில் உள்ள தளத்திற்குச் செல்லவும்.

3. விண்டோஸ் சிஸ்டத்தினை வேகமாக இயக்கலாம். இதற்கு ஸ்டார்ட் அப் புரோகிராம்கள் லோட் ஆவதை தாமதப்படுத்தலாம். இலவசமாக, ஸ்டார்ட் அப் டிலேயர் (Startup Delayer) என்ற புரோகிராம் இதற்கு உதவும். இதனைப் பெற http://www.online-tech-tips.com/computer-tips/speed-up-windows-xp-boot/ என்ற முகவரிக்குச் செல்லவும். பொதுவாக பல ஸ்டார்ட் அப் புரோகிராம்கள், காலப் போக்கில் நமக்குத் தேவையற்றதாக இருக்கும். இவற்றை இந்த பட்டியலில் இருந்து நீக்க msconfig என்ற கட்டளையை ரன் பாக்ஸில் இயக்கி நீக்கவும்.

4. விண்டோஸ் எக்ஸ்பி மற்றும் விஸ்டாவில் விண்டோஸ் சர்ச் இன்டெக்ஸிங் என்ற பணி தொடர்ந்து நடைபெறும். இது நடைபெறுவதனை நிறுத்தி வைக்கலாம். அதே போல, பெர்பார்மன்ஸ் ஆப்ஷன்ஸ் பெற்று, தேவையற்ற அலங்கார விண்டோக்கள், திரைக் காட்சிகளை நீக்கலாம். இந்த வழியைப் பின்பற்றி தேவையற்ற விண்டோஸ் சர்வீஸ்,

செட்டிங்ஸ் மற்றும் புரோகிராம்களை நீக்கலாம்.

5. விண்டோஸ் பூட் ஆகும் நேரத்தைத் துரிதப்படுத்த மைக்ரோசாப்ட் நிறுவனம் Bootvis என்னும் புரோகிராமினைத் தந்துள்ளது. அதன் தளம் சென்று இந்த புரோகிராமினை இலவசமாகப் பெற்று இயக்கவும்.

6. ரெஜிஸ்ட்ரியில் பல ரெபரன்ஸ் வரிகள் தேவையற்றதாய் சில நாட்களிலேயே மாறிவிடும். இவற்றை நீக்கலாம். கவனத்துடன் இதற்கான வழிமுறைகளை மைக்ரோசாப்ட் தளத்தில் பெற்றுக் கையாளவும்.

7. பெர்சனல் கம்ப்யூட்டர்கள் மெதுவாக இயங்குவதற்குக் காரணம், நாம் அறியாமலேயே இன்டர்நெட் வழியாக நம் கம்ப்யூட்டரை வந்தடையும் ஸ்பைவேர் புரோகிராம்களாகும். இவற்றை Ad-Aware, Giant Antispyware, SUPERAntiSpyware போன்ற புரோகிராம் களில் ஏதேனும் ஒன்றின் துணை கொண்டு நீக்கலாம். இவை இணையத்தில் இலவசமாகவே கிடைக்கின்றன. இவற்றின் மூலமாகவும் நீக்க முடியாமல், ஹார்ட் டிஸ்க்கில் தங்கும் ஸ்பை வேர்களை HijackThis to remove spyware என்ற புரோகிராம் மூலம் நீக்கலாம்.

8. சில சாப்ட்வேர் புரோகிராம்கள் தேவையில்லாமல், கம்ப்யூட்டருடன் சிஸ்டம் வரும்போதே பதியப்பட்டு கிடைக்கும். இவற்றை நீக்க PC Decrapifier போன்ற புரோகிராம்களைப் பயன்படுத்தவும்.

9. விண்டோஸ் விஸ்டா இயக்கத்தில் User Account Control என்ற புரோகிராம் தானாகவே தொடங்கி இயங்கும். இதனை நீக்குவது விண்டோஸ் இயக்கத்தின் வேகத்தை அதிகப்படுத்தும். இது பலருக்குத் தேவையற்ற புரோகிராம் ஆகும்.

10. உங்கள் மவுஸ் செட்டிங்ஸில் கவனம் செலுத்துங்கள். அதற்கான வழிகளைச் சொல்லித் தரும் தளங்கள் இணையத்தில் உள்ளன. இதனால் வேகமாக காப்பி, பேஸ்ட், ஸ்குரோல் போன்ற செயல்களை வேகமாக மேற்கொள்ளலாம்.

11. இன்டர்நெட் தேடலில், உலாவில் அநேக பைல்கள் தற்காலிகமாக உருவாக்கப்பட்டு நம் ஹார்ட் டிஸ்க்கில் அடைந்திருக்கும். பிரவுசிங் ஹிஸ்டரி, டெம்பரரி டவுண்லோட் லிங்க்குகள், குக்கீஸ் போன்றவை உருவாகும். இவற்றை சி கிளீனர் (CCleaner) போன்ற புரோகிராம்கள் மூலம் நீக்கலாம். இது போன்ற புரோகிராமினை, கம்ப்யூட்டர் இயக்கம் தொடங்கும்போதோ, முடிக்கும் போதோ இயக்குவது நல்லது.

12. விண்டோஸ் பூட் ஆகும் நேரத்தைக் குறைக்க அதன் லோகோ வருவதைத் தவிர்க்கலாம். இதனை எப்படி மேற்கொள்வது என்பதனை http://www.tech-recipes.com/rx/1353/xp-disable-xp-boot-logo/ என்ற முகவரியில் உள்ள தளத்தில் அறியவும்.

13. தேவைப்படுகிறதோ இல்லையோ, அதிக எண்ணிக்கை யில் எழுத்து வகைகளை (Fonts) நாம் கம்ப்யூட்டரில் சேர்த்து வைக்கிறோம். விண்டோஸ் தரும் எழுத்து வகைகளைக் கூட அனைத்தும் நாம் பயன்படுத்துவதில்லை. விண்டோஸ் இயங்கும் போது பாண்ட்ஸ் போல்டரில் உள்ள அனைத்து எழுத்து வகைகளையும் இயக்கி வைக்கிறது. எனவே இவற்றில் சிலவற்றை நீக்கி, விண்டோஸ் தொடக்கத்தில் இயக்காதபடி போட்டு வைக்கலாம்.

14. குறிப்பிட்ட கால அவகாசத்தில் நீங்கள் பைல்களை பேக்கப் செய்வது வழக்கம் என்றால், சிஸ்டம் ரெஸ்டோர் பயன்பாட்டை முடக்கி வைக்கலாம். இதனால் வேகம் கூடுதலாகும்.

15. மை டாகுமெண்ட்ஸ் போல்டரை, சிஸ்டம் பூட் ஆகும் டிரைவில் இருந்து வேறு ஒரு டிரைவில் அமைக்கலாம்.

16. சில போர்ட்களை நாம் பயன்படுத்தாமலே வைத்திருப்போம். இவற்றின் இயக்கத்தை நிறுத்தி வைக்கலாம்.

17. விஸ்டாவில் என்று ஒரு செயல்பாடு இருக்கும். இதனை நிறுத்தி வைப்பதன் மூலம் வீடியோக்களை யும், படங்களையும் இணையத்தில் வேகமாக பிரவுஸ் செய்திட முடியும்.

18. இன்டர்நெட் பிரவுசிங் செய்கையில் வெப் ஆக்சிலரேட்டர்களைப் பயன்படுத்தவும். இவை நீங்கள் பார்க்க இருக்கும் தளங்களை எடுத்து கேஷ் மெமரியில் வைத்து உங்கள் நேரத்தை மிச்சப்படுத்தி, செயல்பாட்டினை வேகப்படுத்தும்.

19. நீங்கள் பயர்பாக்ஸ் பயன்படுத்துகிறீர்களா! இதன் செயல் வேகத்தை அதிகப்படுத்த ஆட் ஆன் புரோகிராம் ஒன்று FasterFox என்ற பெயரில் உள்ளது. அதனைப் பயன்படுத்தவும்.



20. உங்கள் கம்ப்யூட்டர் வடிவமைக்கப்பட்டு மாதங்கள் அல்லது ஆண்டுகள் பல ஆகிவிட்டதா? சின்ன சின்ன வேகமாகச் செயல்படும் பாகங்களை, பழையனவற்றின் இடத்தில் இணைப்பதன் மூலம் கம்ப்யூட்டரின் செயல்பாட்டைத் துரிதப்படுத்தலாம்.

இதன் தொடர்ச்சி அடுத்த வாரம்...

பழைய கம்ப்யூட்டரை விற்கிறீங்களா?

பல ஆண்டுகள் ஒரு கம்ப்யூட்டரைப் பயன்படுத்தியபின் அதனை விற்பனை செய்யலாம் என்று பலர் செல்கின்றனர். ஏழு அல்லது எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டால் அதனை வாங்கிப் பயன்படுத்துவது மிகக் கடினம். எனவே இப்போதெல்லாம் அத்தகைய கம்ப்யூட்டர்கள் பழைய பேப்பர், இரும்பு சாமான்களோடுதான் விலையிடப்பட்டு விற்பனை ஆகிறது. சரி, பரவாயில்லை; ஏதோ காசு வந்தால் சரி என்று அப்படியே கொடுத்துவிடாதீர்கள். ஹார்ட் டிஸ்க்கைக் கழட்டிக் கொண்டு கொடுங்கள். ஏனென்றால் என்னதான் பழைய பைல்களை அழித்திருந்தாலும் அவற்றை எப்படியாவது கண்டுபிடிக்கும் ஆட்கள் இருக்கின்றனர். உங்கள் ரகசிய மற்றும் பெர்சனல் பைல்கள் ஏன் இவர்களிடம் சிக்க வேண்டும். எனவே அவற்றைக் கழற்றி நீங்களே உடைத்துவிடுங்கள்.

அடுத்த ஜூலையில் விண்டோஸ் 8

விண்டோஸ் 7 வெளிவந்து சில மாதங்களே ஆன நிலையில், அதற்குள் விண்டோஸ் 8 ஆ? என்ற கேள்விக் குறி எழலாம். ஆம், அடுத்த திட்டத்திற்குத் தயாராவது தானே அமெரிக்க நிறுவனங்களின் வாடிக்கை. அந்த வகையில் விண்டோஸ் 8 பதிப்பு தொடங்க மைக்ரோசாப்ட் அடுத்த ஜூலையைக் குறித்துள்ளது. இந்த திட்டத்தில் ஈடுபடுத்த மைக்ரோசாப்ட் ஏழு முறை புதிய வல்லுநர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. அழைப்பு விடுத்த சில நாட்களில், அது எடுக்கப்பட்டுவிட்டாலும் பலர் இதனைக் கவனித்து மைக்ரோசாப்ட் திட்டம் குறித்து அறிந்துள்ளனர். அநேகமாக 2012ல், விண்டோஸ் பதிப்பு 8 வெளி வரலாம். இந்த ஆப்பரேட்டிங் சிஸ்டம் 128 பிட் என்ற அடிப்படை அளவில் செயல்படும் சிஸ்டமாக இருக்கலாம் என்பது பலரின் கணிப்பு.

ஸ்பேம் மெயில்கள்

நம் இமெயில் இன்பாக்ஸில் நாளொன்றுக்குத் தேவையற்ற குப்பை மெயில்கள் குறைந்தது 20 ஆவது வந்து சேரும். நாம் அவற்றைப் படிக்காமலேயே குப்பைக்கு வீசுகிறோம். அண்மையில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு இது குறித்த ஆச்சரியமான தகவல் ஒன்றைத் தெரிவிக்கிறது. இது போன்ற மொத்த ஸ்பேம் மெயில்களை அனுப்புபவர்கள் தாங்கள் வைத்துள்ள இமெயில் முகவரிகளை அகர வரிசைப்படுத்தி வைத்திருக்கின்றனர்.

தேவையற்ற மெயில்களை அனுப்புகையில் மேலாக உள்ள மெயில்களில் தாங்கள் விரும்பும் எண்ணிக்கையில் அனுப்பிவிடுகின்றனர். இதனால் ஆங்கில அகர வரிசைப்படி உள்ளதில் முதல் 12 (A-L)எழுத்துக்களில் யூசர் நேம் வைத்திருப்பவர்களே அதிக ஸ்பேம் மெயில்களைப் பெறுவதாக அறியப் பட்டுள்ளது. எனவே உங்களுக்கு ஸ்பேம் மெயிலே வேண்டாம் என்றால் Z என்ற எழுத்துடன் உங்கள் யூசர் நேம் தொடங்கட்டும்.

கிளிப் போர்டு பெறுவது எப்படி?

எம்.எஸ். ஆபீஸ் தொகுப்பில் நீங்கள் எந்த டெக்ஸ்ட், படம், கிராபிக்ஸ் என எதனை காப்பி அல்லது கட் செய்தாலும் அது கிளிப் போர்டு வியூவரில் தான் சென்று அமரும். எனவே எந்த ஒரு நிலையிலும் நீங்கள் இறுதியாகக் காப்பி செய்தது என்ன என்று தெரிந்து கொள்ள கிளிப் போர்டு வியூவரைக் காணலாம். இதனை எங்கிருந்து பெறுவது? எந்த தொகுப்பிலும் டெக்ஸ்ட் ஒன்றை தேர்ந்தெடுத்து கண்ட்ரோல் + சி (Ctrl-C) அழுத்துகிறீர்கள் அல்லவா? அப்போது இருமுறை C அழுத்துங்கள். உடனே கிளிப் போர்டு விரிவடையும். அதில் என்ன டெக்ஸ்ட் உள்ளது என்று தெரியவரும்.

அதிகம் தேடப்பட்டது எது?

2009 ஆம் ஆண்டு முடியப் போகிறது. இந்த ஆண்டில் கூகுள் தளம் மூலம் அதிகம் தேடப்பட்டது என்ன விஷயம்? அல்லது யாரை? என்று அந்த தளத்தில் தகவல்கள் கிடைத்துள்ளன. நூறு கோடிக்கு மேல் தேடல்கள் இருந்தாலும், அவற்றில் மீண்டும் மீண்டும் தேடப்பட்டவற்றை வடிகட்டியும், தேவையற்ற முறையிலும், நோக்கமின்றியும் தேடப்பட்டவற்றை நீக்கியும் தேடல்கள் ஆய்வு செய்யப்பட்டன. அதே போல் தனி நபர் குறித்த தேடல்களும் ஆய்விலிருந்து நீக்கப்பட்டன. பின் கிடைத்தவற்றை ஆய்வு செய்ததில் சில ஆர்வமூட்டும் தகவல்கள் கிடைத்தன.

உலக அளவில் அதிகம் தேடப்பட்டவர் இந்த ஆண்டில் மறைந்த மைக்கேல் ஜாக்சன் தான். அடுத்த இடத்தைப் பிடித்தது பேஸ்புக். இதற்குப் பின்னால் அணிவகுப்பவை – Twitter, sanalika, new moon, lady gaga, windows 7, dantri.com.vn and torpedo gratis ஆகும். பொழுது போக்கு என்ற பிரிவிலும் முதல் இடத்தை மைக்கேல் ஜாக்சன் பிடித்துள்ளார். சாப்பாடு பிரிவில் acai berry முதல் இடத்தைப் பெறுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜிமெயில் காண தனி கீ போர்டு

கூகுள் ஜிமெயில் தளத்தில் பல ஷார்ட் கட் கீகளைப் பயன்படுத்தலாம். ஆனால் அவற்றை நினைவில் வைத்திருப்பது பலருக்கு சிரமமாயுள்ளது என்ற குற்றச் சாட்டு பொதுவாக எழுவது உண்டு. இந்த சிரமத்தைப் போக்க, கூகுள் ஜிமெயில் தளத்தில் பயன்படுத்த எனத் தனியே கீ போர்ட் ஒன்று உருவாக்கப்பட்டு விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விலை 19.99 அமெரிக்க டாலர். விரைவில் இந்தியாவிலும் இது வரலாம்.

இது 19 கீகள் கொண்டு நம்பர் கீ பேட் போல அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கீயிலும் ஒரு ஷார்ட் கட் வழி அமைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு மெசேஜை ஸ்டார் இட்டு அமைப்பது, சர்ச் ஒன்றைத் தொடங்குவது, மெசேஜ் த்ரெட்களுக் கிடையே செல்வது போன்ற செயல்பாடுகளுக்கு இந்த ஷார்ட் கட் கீகள் வழி அமைத்துக் கொடுக்கின்றன.

இதனை யு.எஸ்.பி. போர்ட்டில் இணைத்துப் பயன்படுத்தலாம். இதனை செட் செய்வதற்கு எனத் தனியே டிரைவர் புரோகிராம் எதுவும் தேவையில்லை. ஆனால் ஜிமெயில் இணைய தளம் சென்று அதில் ஷார்ட் கட் கீகளை இயக்கும் விருப்பத்தில் டிக் அடையாளம் ஏற்படுத்த வேண்டும்.

ஜிமெயில் இணைய தளம் இல்லாத போது, இந்த ஷார்ட் கட் கீகளில் என்ன கீகள் பயன்படுத்தப்படுகின்றனவோ, அந்த கீகளாக இவை செயல்படும்.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் எதுவென்றால், இதனை வடிவமைத்து, உருவாக்கித் தந்தது கூகுள் நிறுவனம் இல்லை. திரைப்பட தயாரிப்பாளர் சார்லி மேசன் என்பவராவார்.

ஏற்கனவே நீங்கள் ஜிமெயில் ஷார்ட் கட் கீகளை நன்கு பயன்படுத்துபவராக இருந்தால் இந்த கீ போர்டு தேவையில்லை. இருப்பினும் விரைவான செயல்பாடு இதன் மூலம் கிடைக்கும் என்று எண்ணுபவர்களுக்கு நிச்சயம் இந்த கீ போர்டு உதவியாக இருக்கும்.

ஜிமெயிலில் ஏறத்தாழ 69 கீ போர்டு ஷார்ட் கட் கீகள் இருக்கின்றன என்று எண்ணுகையில் இந்த கீ போர்டு நம் வேலையை எளிதாக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தியாவில் இது கிடைக்கும் நாளை எதிர்பார்ப்போம்.

ஜிமெயில் டிப்ஸ்

இன்று பெரும்பாலானவர்கள் பயன்படுத்தும் இலவச இமெயில் தளமாக ஜிமெயில் உருவெடுத்துள்ளது. இந்த இமெயில் அக்கவுண்ட் வைத்துக் கொண்டால் தான் கூகுள் தரும் அனைத்து வசதிகளையும் பயன்படுத்த முடியும். எனவே பயன்படுத்துகிறோமோ இல்லையோ பலரும் ஜிமெயில் தள அக்கவுண்ட் வைத்துள்ளனர்.

ஜிமெயில் தளம் சென்றவுடன் நமக்கு வந்திருக்கும் மெயில்களின் பட்டியலைப் பார்த்தால் அவை நமக்கு வந்த தேதிவாரியாக வைக்கப்பட்டிருப்பதனைப் பார்க்கலாம். பொதுவாக நாம் இமெயில்களைப் பார்த்தவுடன், அனுப்பியவர்களின் பெயரைப் பார்த்து, முக்கிய மெயில்களை முதலில் பார்ப்போம். பின்னர், மற்ற மெயில்களை சாவகாசமாகப் படிப்போம். எனவே மெயில் வரிசையில் சில மெயில்கள் படித்தவையாகவும், சில படிக்காதவையாகவும் இருக்கும். படிக்காதவற்றைத் தேடி எடுத்து கிளிக் செய்து படிக்கும் சிரமத்தைப் போக்க, ஜிமெயில் ஒரு வசதியினைத் தந்துள்ளது. ஜிமெயில் அஞ்சல் பட்டியல் மேலாக உள்ள தேடல் பாக்ஸில் 'is:unread in:inbox' எனக் கொடுத்து 'Search Mail' கிளிக் செய்தால் நாம் படிக்காத மின் அஞ்சல்கள் மட்டும் காட்டப்படும். அவற்றைப் படிக்கலாம்; அல்லது நீக்கலாம்.

கிராஷ் ஆன பின் போல்டர்களைக் காப்பாற்ற

விண்டோஸ் எக்ஸ்பியில் நிறைய போல்டர்களைத் திறந்து வைத்து செயல்படும்போது ஒன்று கிராஷ் ஆனாலும் அனைத்தும் மூடப்படும். இதனை நாம் தவிர்க்கலாம். அதற்கான வழியை எக்ஸ்பி வைத்துள்ளது. கண்ட்ரோல் பேனலைத் திறந்து Folder Options என்னும் பிரிவினைத் தேர்ந்தெடுக்கவும். அதில் வியூ டேபிற்குச் செல்லவும். அதில் பல ஆப்ஷன்கள் தரப்பட்டிருக்கும். அவற்றில் 'Launch folder windows in a separate process' என்று ஒன்று இருக்கும். அதன் அருகே டிக் மார்க் அடையாளம் ஏற்படுத்தி பின் ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

ஸ்ட்ராங் பாஸ்வேர்ட் எப்படி இருக்க வேண்டும்?

வீட்டுக்கு சாவி கூட இப்படி அப்படி இருக்கலாம்? வீதி முனை சாவி மெக்கானிக்கை அழைத்தால், அச்சாக இன்னொரு சாவி தந்திடுவார். ஆனால் நம் பாஸ்வேர்ட் சரியாக இல்லாமல், அடுத்தவர் எளிதாக அறிந்து கொள்ளும் நிலையில் இருந்தால், நம் நிலை மிக மோசமாக மாறிவிடும். அதனால் தான் கம்ப்யூட்டர் பாதுகாப்பு குறித்து பேசுபவர்களெல்லாம், வலிமையான பாஸ்வேர்ட் அமைக்க வேண்டும் என எச்சரிக்கை விடுகிறார்கள். மிக ஸ்ட்ராங்கான பாஸ்வேர்ட் அமைக்கும் சில வழிகளை இங்கு காணலாம்.

1. தங்கள் நிறுவனத்திற்கு மிகக் கட்டுக் கோப்பான தகவல் தொழில் நுட்ப கட்டமைப்பை கம்ப்யூட்டரில் அமைப்பவர்கள், இவற்றிற்கான பாஸ்வேர்ட்கள் அமைக்க, அதற்கென்று பாஸ்வேர்ட் அமைக்கும் புரோகிராம்களை நிறுவிக் கொள்ளலாம். இவை ரேண்டமைஸ்டு பாஸ்வேர்ட் என்று சொல்லப்படும், யாரும் கணிக்க இயலாத பாஸ்வேர்ட்களை அமைத்து இயக்குகின்றன. மேலும் குறிப்பிட்ட கால இடைவெளியில் அவற்றை மாற்றவும் செய்கின்றன. எனவே இத்தகைய நிறுவனங்கள், கட்டணம் செலுத்தி அத்தகைய பாஸ்வேர்ட் புரோகிராம்களை வாங்குவதுதான் நல்லது.

2. பாஸ்வேர்டில் எழுத்து, எண் மற்றும் சிறப்பு குறியீடுகளை அமைக்கவும். எழுத்துக்களைக் கூட பெரிய மற்றும் சிறிய எழுத்துக்களைக் கொண்டு அமைக்கலாம். எண்கள் தொடர்ச்சியாக இல்லாமல் இடை இடையே சிறப்புக் குறியீடுகளை அமைக்கலாம்.

3. பாஸ்வேர்ட்களை நம் நினைவில் நிறுத்திக் கொள்ளும் வகையில் எளிதாக அமைப்பதனைக் கைவிட வேண்டும். அதற்குப் பதிலாக, நினைவில் நிற்கக் கூடிய பொருளற்ற சொல் தொடர்களை அமைக்கலாம். dubidubi என்பதெல்லாம் அத்தகைய சொல் தொடர்களே. இதனை d*uBi(dU(bi என்ற படி இன்னும் நீளமாக அமைக்கலாம்.

4. பாஸ்வேர்ட்களை குறிப்பிட்ட காலத்தில் மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும். இன்றைய கம்ப்யூட்டர் பயன்பாட்டில், இமெயில் புரோகிராம்கள், இன்டர்நெட் பேங்கிங் சேவை, சோஷியல் நெட்வொர்க் தொடர்பு, நிறுவன வேலை இயக்கம், பொது கம்ப்யூட்டர்களில் வேலை எனப் பலவித இடங்களில் பாஸ்வேர்ட் பயன்படுத்த வேண்டியுள்ளது. இவற்றை நினைவில் வைத்து அவ்வப்போது மாற்றுவது சற்று கடினமே. இருப்பினும், இவற்றிற்கிடையே ஏதேனும் ஒரு வழி ஒன்றை தொடர்பாக வைத்து, அதன் அடிப்படையில் பாஸ்வேர்ட்களை மாற்றி வைத்துக் கொள்வது நல்லது.

5. பாஸ்வேர்ட்களில் உங்கள் பெயர், இரத்த தொடர்புடைய உறவுகளின் பெயர்கள், இவர்கள் சார்ந்த தேதிகள் ஆகியவற்றை அறவே தவிர்த்துவிடுங்கள். இவற்றை உங்களைச் சார்ந்தவர்கள் எளிதாகக் கண்டறியலாம்.

கம்ப்யூட்டர் பயன்பாட்டில் ஒரே செயலுக்கு இரு வேறு கீ தொகுப்புகளைப் பயன்படுத்தலாம். இவற்றில் நமக்கு அடிக்கடி தேவைப்படும் ஜோடி கீகளையும் அவற்றிற்கான செயல்பாடுகளையும் இங்கு பார்க்கலாம்.

செய்ததை நீக்க (Undo) – Ctrl +Z
தேர்ந்தெடுத்ததை நீக்க (Cut) – Ctrl +X
நகலெடுக்க (Copy) – Ctrl +C
எடுத்ததை ஒட்ட Ctrl +V

டிப்ஸ் கதம்பம்

இந்தச் செயல்களை வேறு சில கீகளை அழுத்தியும் மேற் கொள்ளலாம். அவை:

Ctrl +Z = Alt-Backspace
Ctrl +X = Shift-Del
Ctrl +C = Ctrl-Ins
Ctrl +V = Shift-Ins

அடிக்கோடிட

வேர்ட் தொகுப்பில் உருவாக்கும் டாகுமெண்ட்களில் பல சொற்களில் அன்டர்லைன் செய்கையில் சொற்களுக்கு இடையே கோடில்லாமல் சொற்களுக்கு மட்டும் கோடிட Ctrl + Shift + W என்ற கீகளை அழுத்தவும்.

எக்ஸெல் ட்ரான்ஸ்போஸ் பேஸ்டிங்

எக்ஸெல் தொகுப்பில் டேட்டாவினை காப்பி செய்து பேஸ்ட் செய்வதற்குப் பல வழிகள் உள்ளன. இவற்றை நாம் அறிந்து கொண்டால் நல்ல பயனுள்ள வகையில் இவற்றைப் பயன்படுத்தலாம். பேஸ்டிங் செய்வதற்கான பல வழிகளை முதலில் எங்கிருந்து பெறுவது என்ற கேள்வி எழலாம். இதனை எடிட் (Edit) மெனு சென்று கிளிக் செய்து கிடைக்கும் பட்டியலில் இருந்து பேஸ்ட் ஸ்பெஷல் (Paste Special) என்ற பிரிவைத் தேர்ந்தெடுக்கவும். இதில் பேஸ்ட் செய்வதற்கான பல வழிகள் காட்டப்படும். இவற்றில் மிகவும் பயனுடையதாக ட்ரான்ஸ்போஸ் (Transpose) வசதியைக் கூறலாம். ட்ரான்ஸ்போஸ் என்பது நெட்டு வரிசை செல்களைப் படுக்கை வரிசைகளாகவும் படுக்கை வரிசை செல்களை நெட்டு வரிசையிலும் ஒட்டும். எடுத்துக் காட்டாக B1 முதல் B5 வரை உள்ள செல்களை முதலில் காப்பி செய்கிறீர்கள். பின் உங்கள் கர்சரை B10 ல் வைத்து, எடிட், பேஸ்ட் ஸ்பெஷல் மற்றும் அதன் பின் ட்ரான்ஸ்போஸ் (Edit,Paste Special & Transpose) என்பதைத் தேர்ந்தெடுத்தால், அந்த செல்கள் B10, C10, D10, E10 மற்றும் F10 ஆகியவற்றில் பேஸ்ட் செய்யப்படும். இதே போல படுக்கை வாக்கில் உள்ள செல்களைக் காப்பி செய்து ட்ரான்ஸ்போஸ் செய்தால், செல்கள் நெட்டு வரிசையில் பேஸ்ட் செய்யப்படும்.

பைல் ப்ராப்பர்ட்டீஸ் தகவல் அறிய

பைல் ஒன்றின் அனைத்து தகவல்களும் உங்களுக்குத் தேவை. என்ன வகை பைல்? அதனை எந்த புரோகிராம் திறக்கும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது? அது கம்ப்யூட்டரில் எங்கே உள்ளது? அதன் அளவு? எங்கே எப்போது உருவாக்கப்பட்டது? இறுதியாக திருத்தியது என்று? போன்ற தகவல்கள் பைல் ப்ராபர்ட்டீஸ் கட்டத்தில் தெரியும். பொதுவாக இதனைப் பெற, பைலைத் தேர்ந்தெடுத்து ரைட் கிளிக் செய்து, பின் கிடைக்கும் மெனுவில் ப்ராப்பர்ட்டீஸ் கிளிக் செய்து பெறுவோம். இந்த வேலையையும் மிச்சப்படுத்தும் வழி உள்ளது. தேர்ந்தெடுத்த பின்னர், ஆல்ட் + என்டர் கீகளைத் தட்டவும். அல்லது ஆல்ட் கீயை அழுத்திக் கொண்டு, பைல் பெயர் மீது இருமுறை கிளிக் செய்திடலாம்.

வேர்ட் டிப்ஸ்

டாகுமெண்ட் உருவான நாள்

வேர்டில் பல டாகுமெண்ட்களை உருவாக்குகிறோம். சில வேளைகளில் எந்த நாளில் ஒரு டாகுமெண்ட்டைத் தயாரித்தோம் என்று தெரிய வேண்டியதிருக்கும். உருவாக்கிய பின் பலமுறை அதனைப் படித்திருப்போம். பல மாற்றங்களை ஏற்படுத்தியிருப்போம். இருப்பினும் உருவாக்கிய முதல் நாளைத் தெரிந்து கொண்டால் அதன் அடிப்படையில் பல மாற்றங்களை மேற்கொள்ள முடிவு செய்திருப்போம். எங்கு இந்த தேதி கிடைக்கும்?

வேர்டில் இந்த வசதி தரப்பட்டுள்ளது. டாகுமெண்ட்டைத் திறந்து கொள்ளுங்கள். பின் Insert மெனு கிளிக் செய்து அதில் Field என்பதைத் தேர்ந்தெடுங்கள். இப்போது Field டயலாக் பாக்ஸ் காட்டப்படும். இதில் Field Names என்று ஒரு பெட்டி இருக்கும். இதில் ஸ்குரோல் செய்து கீழாகச் செல்லுங்கள். அங்கு Create a Date என்று ஒரு பீல்டு காட்டப்படும். இதனைத் தேர்வு செய்தால் உடன் எந்த பார்மட்டில் தேதி காட்டப்பட வேண்டும் என்பதனைத் தேர்வு செய்திட பல பார்மட்கள் வரிசையாகக் காட்டப்படும். இதில் கிழமையுடன் கூடிய தேதி பார்மட்டும் இருக்கும். நீங்கள் விரும்பும் பார்மட்டினைத் தேர்ந்தெடுத்து ஓகே கிளிக் செய்தால், அந்த டாகுமெண்ட் உருவாக்கப்பட்ட முதல் நாள், டாகுமெண்ட்டில் கர்சர் உள்ள இடத்தில் சேர்க்கப்படும்.

கேள்வி || பதில் ||

கேள்வி: எண்ட் கீ ஒன்று தரப்பட்டுள்ளது. இது வரிகளில் ஓரத்திற்குச் செல்ல உதவுவதைக் காட்டிலும் வேறு எதற்காவது பயன்படுகிறதா?

–கே. ரங்கநாதன், விருதுநகர்

பதில்: நல்ல கேள்வி. இப்படி பல கீகள் நம் கீ போர்டில் உள்ளன. இவற்றை அறிந்து கொள்வது அவசியம். எண்ட் கீயைப் பொறுத்தவரை நீங்கள் பயன்படுத்தும் புரோகிராமிற்கு ஏற்ற வகையில் அது செயல்படும். இதனுடைய முக்கிய பயன்பாடு உங்களை டாகுமெண்ட்டின் பக்கம் ஒன்றில் டாப் பகுதியிலிருந்து, கீழ் பகுதிக்கு எடுத்துச் செல்ல உதவிடும். இதுவே இணைய தளத்திலும் செயல்படும். எடுத்துக் காட்டாக, இணைய தளம் ஒன்றைப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு வேண்டியது அந்தப் பக்கத்தின் கீழ்ப் பகுதியில் உள்ளது. எண்ட் கீயினை அழுத்தினால் உங்கள் கர்சர் அங்கே இருக்கும். சிறிய டெக்ஸ்ட்டில் வரி ஒன்றின் இறுதி இடத்திற்கு எடுத்துச் செல்லும். இந்த கீ நம்பர் பேடிற்கு இடது பக்கம் உள்ள பேஜ் டவுண் கீக்கு அருகே இடது பக்கம் இருக்கும்.

கேள்வி: இமெயில் கடிதங்களில் பல சுருக்குச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக இளைஞர்கள் இவற்றைப் பயன்படுத்துகின்றனர். எடுத்துக்காட்டாக சில சொற்கள்: LMFR, SLOS, GTG, BF, WAREZ, ASL, PAH, FOAF, JFGI இவை என்ன பொருள் தருகின்றன; எதனைச் சுருக்கமாகச் சொல்கின்றன என்று தெரியவில்லை. இதற்கென இணையத்தில் ஏதேனும் டிக்ஷனரி உள்ளதா?

-ந. வேலாயுதம், காரைக்குடி

பதில்: நல்ல கேள்வி. நீங்கள் கூறிய பின்னரே நான் இணையத்தில் அப்படி ஒரு டிக்ஷனரி உள்ளதா என்று தேடினேன். இதனை ஸ்லாங் (Slang) என அழைத்து, இதற்கான டிக்ஷனரியை ஸ்லாங் டிக்ஷனரி (Slang Dictionary) எனக் கூறுகின்றனர். அப்படி ஒரு டிக்ஷனரியை http://www.noslang.com/index.php என்னும் முகவரியில் உள்ள தளத்தில் பார்த்தேன். இதன் அடிப்படை என்னவென்றால் இந்த சுருக்குச் சொற்களை, இந்த டிக்ஷனரி ஸ்லாங் இல்லை என்று சொல்லி பொருளைத் தருகிறது. ஸ்லாங் ட்ரான்ஸ்லேட்டர், ஸ்லாங் டிக்ஷனரி, நெட்ஸ்பீக் கைட், ஆட் ஸ்லாங், எப்.ஏ.க்யூ, பிளாக் மற்றும் சர்ச் என்ற பல டேப்களுடன் இந்த தளம் அமைந்துள்ளது. இதனை இயக்கி உங்களுக்குத் தேவையான பிரிவைத் தேர்ந்தெடுத்து, நீங்கள் பொருள் காண விரும்பும் சொல்லை டைப் செய்து பதிலைப் பெறலாம். மிக சுவராஸ்யமான சங்கதிகள் எல்லாம் இதில் கிடைக்கின்றன. இன்டர்நெட்டில் பரிமாறிக் கொள்ளப் படும் சொற்களுக்கு இந்த தளம் அருமையான ஒரு வழிகாட்டி.

கேள்வி: காலகுலேட்டர், டாஸ் கமாண்ட் ப்ராம்ப்ட், பெயிண்ட் போன்ற நான் அடிக்கடி பயன்படுத்தும் புரோகிராம்களைத் திறக்க ரன் கட்டத்தில் கட்டளைகளை டைப் செய்து திறக்கிறேன். ஆனால் இந்த கட்டத்தைப் பெற ஸ்டார்ட் கிளிக் செய்து இதனைப் பெற வேண்டியுள்ளது. குயிக் லாஞ்ச் பாரில் இதனை வைத்து இயக்க முடியுமா?

–எஸ். பிரதீப் குமார், உத்தமபாளையம்

பதில்: ரன் பாக்ஸ் சுருக்கமான கீகளில் வேண்டும் என்றால், விண்டோஸ் கீயுடன் ஆர் கீயை அழுத்தினால் போதும். நான் அப்படித்தான் செய்வேன். ஆனால் உங்கள் கேள்வியைப் படித்த பின்னரே, இதுவும் நல்ல

கேள்வி பதில்

வழியாய் உள்ளதே என்று எண்ணி வழி தேடினேன். வழி கிடைத்தது. ஸ்டார்ட் பட்டனில் கிளிக் செய்து எழும் கட்டத்தில் கீழாக உள்ள ரன் கட்டளை அருகே உள்ள ஐகான் அருகே உங்கள் மவுஸின் கர்சரைக் கொண்டு செல்லுங்கள். அப்படியே அந்த ஐகான் மீது மவுஸ் கிளிக் செய்து இழுத்து வந்து குயிக் லாஞ்ச் பாரில் விட்டுவிடுங்கள். இப்போது ரன் ஐகான் குயிக் லாஞ்ச் பாரில் இருக்கும். இதன் அருகே மவுஸின் கர்சரைக் கொண்டு சென்றால் &Run என்று கிடைக்கும். இதன் பெயரை மாற்ற வேண்டுமானால், ஐகான் மீது ரைட் கிளிக் செய்து ரீநேம் தேர்ந்தெடுத்து மாற்றலாம். இந்த ஐகானில் கிளிக் செய்தால் உடன் ரன் பாக்ஸ் கிடைக்கும். நீங்கள் திறக்க விரும்பும் புரோகிராமிற்கான கட்டளைச் சொல்லை டைப் செய்து என்டர் செய்திடலாம். இந்த ஐகான பின் நாளில் நீக்க வேண்டும் என்றாலும் மற்ற ஐகான்களை நீக்குவது போல நீக்கிவிடலாம்.

கேள்வி: தேவையற்ற பைல்களைக் கிளீன் செய்திடுகையில், தேவையான இரண்டு பைல்களையும் டெலீட் செய்து நீக்கிவிட்டேன். இந்த இரண்டு பைல்களையும் எப்படி மீட்கலாம்?

–என். ஜெயந்தி மனோகர், திண்டுக்கல்

பதில்: நீங்கள் கொடுத்திருக்கும் தகவல்கள் மிகவும் குறைவு. எனவே நீண்ட பதில் தருகிறேன். முதலில் ரீசைக்கிள் பின்னைத் தேடவும். அதில் நீங்கள் அழித்த பைல் இருந்தால், அதனைத் தேர்தெடுத்து, ரைட் கிளிக் செய்திடவும். பின் Restore என்பதைத் தேர்ந்தெடுத்து கிளிக் செய்தால், பைல் எந்த போல்டரிலிருந்து வந்ததோ அந்த போல்டருக்கு அனுப்பப்படும். இந்த பைலை நீங்கள் விரும்பும் போல்டரில் வைத்திட வேண்டும் என விரும்பினால், Cut என்பதைத் தேர்ந்தெடுத்து கிளிக் செய்திடவும். இப்போது அந்த பைல் தற்காலிகமாக நீக்கப்படும். எந்த போல்டரில் வைத்திட விரும்புகிறீர்களோ, அந்த போல்டரைத் திறந்து ரைட் கிளிக் செய்து, கிடைக்கும் மெனுவில் Paste என்பதில் கிளிக் செய்திடவும். இந்த இரு பைல்களை அழித்த பின் அதிகமான எண்ணிக்கையில் பைல்களை அழித்திருந்தால், மற்ற பைல்களுக்கு இடம் அளிக்க, ரீசைக்கிள் பின் இந்த பைல்களை வெட்டியிருக்கும். அப்படிப்பட்ட நிலையில் இந்த பக்கங்களில் அடிக்கடி தரப்பட்ட பைல் மீட்பு புரோகிராம்களில் ஒன்றின் மூலம் மீட்க முயற்சிக்கவும்.

கேள்வி: நான் விஸ்டா பயன்படுத்துகிறேன். இதனை செட் செய்கையில், டிபிராக் புரோகிராம் தானாக, குறிப்பிட்ட எண்ணிக்கையில் கம்ப்யூட்டரை இயக்கினால் இயங்கும்படி அமைத்திருக் கிறார்கள். இது கம்ப்யூட்டரை மந்த நிலைக்குக் கொண்டு செல்கிறது. இதனை நிறுத்தி நான் விரும்பும்போது மட்டும் இயங்குபடி அமைக்க முடியுமா?

–கே.டி. திருஞானம், வேளச்சேரி

பதில்: முடியும். விஸ்டா மட்டுமின்றி விண்டோஸ் 7 தொகுப்பிலும் இவ்வாறு டிபால்ட்டாக செட் செய்யப்பட்டுள்ளது. இந்த செட் அப்பை மாற்றலாம். முதலில்



கேள்வி பதில்

டெஸ்க்டாப்பில் உள்ள My Computer ஐகான் மீது டபுள் கிளிக் செய்திடவும். பின் அதில் உள்ள C டிரைவில் ரைட் கிளிக் செய்து கிடைக்கும் மெனுவில், Properties என்னும் பிரிவினைத் தேர்ந்தெடுக்கவும். கிடைக்கும் விண்டோவில் Tools என்னும் டேபினைத் தேர்ந்தெடுக்கவும். இதில் Defragment Now என்ற ஆப்ஷனைத் தேர்ந்தெடுக்கவும். (என்ன சார், நான் கேட்பதற்கு நேர் மாறாகப் பதில் தருகிறீர்களே என்று மனதிற்குள்ளேயே சொல்லி திட்டாதீர்கள்.) மேலும் கீழே செல்லவும். அங்கு Run on a Schedule என்பதன் எதிரே உள்ள டிக் அடையாளத்தை எடுத்துவிடவும். இதனால் எப்போதெல்லாம் டிபிராக் இயக்கப்பட வேண்டும் என்று குறித்து வைத்தவை அனைத்தும் நீக்கப்படும். இனி நீங்கள் விரும்பி இயக்கினால் மட்டுமே டிபிராக் செயல்படும். விண்டோஸ் 7 சிஸ்டத்திலும் இதே போல் மாற்றிவிடலாம்.

கேள்வி: மொபைல் போனின் ஐ.எம்.இ.ஐ. குறித்து திடீரென ஏன் இந்த நடவடிக்கை? இந்த எண் எதைக் குறிக்கிறது? இதனை எப்படி தெரிந்து கொள்வது?

–கா. மங்கையர்க்கரசி, திருவாடனை

பதில்: அனைத்து மொபைல் போன்களும் அதனை அடையாளம் காட்டும் எண்ணுடன் அமைக்கப்பட வேண்டும் என்பது பன்னாட்டுவிதி. ஆனால் பல போலி நிறுவனங்கள், குறிப்பாக சீன நிறுவனங்கள், இந்த எண் இல்லாமல் மொபைல் போனை வடிவமைத்து குறைந்த விலையில் விற்று வந்தனர். இது தேசிய அளவில் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருந்ததால், அரசு இந்த தீவிர நடவடிக்கையை, தகுந்த காலக்கெடுவுடன் எச்சரிக்கை கொடுத்துத்தான் எடுத்தது. இந்த எண் குறித்து மேலும் தகவல்கள் அறிய http://www.number-ingplans.com/?page=analysis,"=imeinr என்ற முகவரியில் உள்ள தளத்திற்குச் செல்லவும்.

அதற்கு முன் உங்களின் மொபைல் போன் எண்ணைத் தெரிந்து கொள்ளவும். போனில் *#06# என எண்ணாக டைப் செய்து பட்டனை அழுத்தினால் உங்கள் போனின் தனி எண் கிடைக்கும். இல்லை என்றால் போனின் பேட்டரியைக் கழட்டினால் அதன் கீழாக இந்த எண் கிடைக்கும். இது 15 இலக்கங்கள் கொண்ட எண். இதனை மேலே சொன்ன இணைய தளத்தில் என்டர் செய்தால், எண்ணில் உள்ள ஹைபன் உட்பட, உங்கள் போன் தயாரிக்கப்பட்ட நாடு, நிறுவனம், போனின் மாடல் எண் ஆகியவை கிடைக்கும். இவை அனைத்தும் அந்த எண்ணில் உள்ளது.

திருட்டு சாப்ட்வேர்: களத்தில் இறங்குகிறது மைக்ரோசாப்ட்

கம்ப்யூட்டர் பயன்பாடு அதிகரிக்கும் வேளையில், திருட்டு நகல் சாப்ட்வேர் வரத்தும் பெருகி வருகிறது. இதனைத் தடுக்கும் வழிகளில் மைக்ரோசாப்ட் இந்தியா களத்தில் இறங்குகிறது. ஏற்கனவே தன் விண்டோஸ் மற்றும் ஆபீஸ் தொகுப்புகளைத் தானாகவே சோதனை செய்து, அவை ஒரிஜினல் இல்லை என்றால் உடனே ஒரிஜினல் சாப்ட்வேர் தொகுப்புகளை வாங்கச் சொல்லி அறிவுறுத்தி வந்தது. அத்தகைய சாப்ட்வேர் தொகுப்பு களுக்கு உதவியை நிறுத்தியது.

தற்போது வாடிக்கையாளர்களையும் இணைத்தே இந்த தடுப்பு நடவடிக்கையில் இறங்கி உள்ளது. சென்ற டிசம்பர் 3 அன்று நுகர்வோர் விழிப்புணர்வு தினம் உலகெங்கும் கொண்டாடப்படுகையில், இந்த நடவடிக்கை யினை மைக்ரோசாப்ட் எடுத்துள்ளது.

தங்களை அறியாமலேயே, தாங்கள் செலுத்திய பணத்திற்கு முறையான லைசன்ஸ் இன்றி சாப்ட்வேர் தொகுப்புகளைக் கம்ப்யூட்டர்களுடன் பலர் பெறுகின்றனர். இதனால் மால்வேர் எனப்படும் தீங்கிழைக் கும் சாப்ட்வேர்கள் இந்த கம்ப்யூட்டர்களில் பரவி இயங்கத் தொடங்குகின்றன. வாடிக்கையாளர்கள் இதனால் தொல்லைக்கு உள்ளாகின்றனர். தீங்கிழைக்கும் இந்த புரோகிராம்களால், அவர்களின் பெர்சனல் தகவல்கள் திருடப்பட்டுப் பிறரால் பயன்படுத்தப்படும் நிலை உருவாகிறது.

எனவே இது போன்ற திருட்டு நகல் சாப்ட்வேர்கள் தங்கள் கம்ப்யூட்டருடன் உள்ளது எனத் தெரியவந்தால், அந்த வாடிக்கையாளர்கள் www.microsoft.com/piracy என்ற இணைய தளத்தில் தங்கள் புகார்களைப் பதியலாம். அல்லது piracy@microsoft.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். அல்லது அந்த தளத்தில் தரப்பட்டிருக்கும் தொலைபேசி எண்களைத் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

இதனை எப்படித் தெரிவிப்பது, எந்த விபரங்களைத் தர வேண்டும், போலி திருட்டு நகல் சாப்ட்வேர் எப்படி இருக்கும், என்பது போன்ற தகவல்களை அறிய விரும்பினால் http://www.microsoft. com/howtotell என்ற முகவரியில் அவற்றைப் பெறலாம்.

சரி, நல்ல, உண்மையான சாப்ட்வேர் தொகுப்புகளை எங்கு வாங்குவது? என்ற கேள்வி எழுகிறதா? http://www.buyoriginalms.com என்ற இணைய தளத்திலிருந்து பெறலாம்.

மும்பை, புதுடில்லி மற்றும் லக்னோ நகரங்களில், காவல்துறை உதவியுடன், திருட்டு நகல் சாப்ட்வேர் சிடிக்களைப் பெரிய அளவில் கைப்பற்றி, விற்பனை செய்தவர்களையும், சிடிக்களைத் தயாரித்தவர்களையும் நீதிமன்றம் மூலமாக மைக்ரோசாப்ட் தண்டனை வாங்கித் தந்துள்ளது. இந்த திட்டத்தினை மைக்ரோசாப்ட் அறிவித்த பின்னர், ஏறத்தாழ ஒரு லட்சத்து 50 ஆயிரம் புகார்கள் மைக்ரோசாப்ட் நிறுவன தளத்தில் பதிவானதாக இந்த பிரிவின் துணைத் தலைவர் அறிவித்துள்ளார். சென்ற ஆண்டில் மட்டும் இந்தியாவில் போலி மென்பொருட்களால் இந்திய அரசுக்கு ரூ.12,000 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. போலி சாப்ட்வேர் தயாரிப்பினைத் தடுத்தால், கூடுதலாக 44 ஆயிரம் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும், அதனால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 130 கோடி டாலர் அளவிற்கு உயரும் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே அரசும் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் முயற்சிக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் தந்து வருகிறது.

யூனிநார் – தொடக்கமே தூள்

நிமிடத்திற்கு 29 பைசா, எஸ்.டி.டி.க்கு 49 பைசா என்ற குறைவான கட்டணத்துடன் மொபைல் சேவையில் இறங்கியுள்ளது யூனிநார். இந்திய மொபைல் சந்தையில் வாரந்தோறும் ஏதாவது அதிரடி ஆரம்பங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. சென்ற வாரம் புதிய நிறுவனமாக யூனிநார், ஜி.எஸ்.எம். சேவையில் இறங்கியுள்ளது. யூனிடெக் மற்றும் நார்வே நாட்டைச் சேர்ந்த டெலிநார் குரூப் இணைந்து யூனிநார் நிறுவனத்தைத் தொடங்கி உள்ளன. டெலிநார் உலக அளவில் தொலை தொடர்பு சேவையில், ஆறாவது பெரிய நிறுவனமாகும்.

யூனிநார் ஒரே நாளில் இந்தியாவின் ஏழு தொலைதொடர்பு மண்டலங்களில், எட்டு மாநிலங்களில், தங்களின் ஜி.எஸ்.எம். சேவையைத் தொடங்கி உள்ளது. எந்த நிறுவனமும் இதுவரை இவ்வாறு ஒரேநாளில் அதிக இடங்களில் தங்கள் ஜி.எஸ்.எம். சேவையைத் தொடங்கியதில்லை என இந்நிறுவனம் அறிவித்துள்ளது. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, உத்தரப் பிரதேசம் கிழக்கு மற்றும் மேற்கு மற்றும் ஜார்க்கண்ட் உட்பட்ட பீஹார் ஆகிய மண்டலங்களில் இந்த சேவை வழங்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் இயங்கும் பிற நிறுவனங்களுடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டு போன் அழைப்புகள் அங்கு அனுப்பப்படுகின்றன.

இந்நிறுவனம் நிமிடத்திற்கு லோக்கல் அழைப்புக்கு 29 பைசா, எஸ்.டி.டி. அழைப்பிற்கு 49 பைசா எனக் கட்டணம் வசூலிக்கிறது. கால் செட் அப் கட்டணமாக 29 பைசா செலுத்த வேண்டும். இன்னொரு திட்டத்தில் நாள் ஒன்றுக்கு ரூ.2 வாடகையாகச் செலுத்தி இதே கட்டணத்தில் அழைப்புகளை மேற்கொள்ளலாம். ஒரு நாளில் நான்கு கால்களை இந்த போனில் குறைந்த பட்சம் ஏற்படுத்தினால் வாடிக்கையாளர்கள் குறைந்த கட்டணப் பயனை அடையலாம். விநாடிக்கு பைசா என்ற திட்டம் எதுவும் யூனி நார் வசம் இல்லை எனத் தெரிகிறது. இந்த சேவைகளை வழங்க நாடெங்கும் 2 லட்சத்து 10 ஆயிரம் விற்பனை மையங்களை அமைத்துள்ளது யூனிநார். தமிழ்நாட்டில் 45 ஆயிரம் மையங்களும், 169 விநியோகஸ்தர்களும் உள்ளனர். மொபைல் பயன்பாடு இளைஞர்களிடம் அதிவேகமாகப் பரவி வருவதால், அவர்களை இலக்காகக் கொண்டு இந்த திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக சென்னை யூனிநார் பிரிவின் தலைவர் ஸ்டெபான் தெரிவித்தார். மொத்த மொபைல் சந்தாதாரர்களில் 8% பேரை 2018க்குள் கொண்டு வர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். 3ஜி வகை சேவையில் இந்த நிறுவனம் தற்போதைக்கு இறங்காது என்றும் தெரிகிறது. இந்தியாவில் ஜப்பானின் டொகொமோ, பிரிட்டனின் வோடபோன், ரஷ்யாவின் சிஸ்டெமா ஆகிய வெளிநாட்டு நிறுவனங்கள் ஏற்கனவே இயங்கி வருகின்றன. நார்வே நாட்டின் டெலிநார் அடுத்ததாகும். அடுத்து அராப் எமிரேட் நாட்டைச் சேர்ந்த எடிசலாட் இந்தியாவில் தன் சேவையினைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

120 கோடி மக்கள் கொண்ட இந்தியாவில், மாதந்தோறும் 1.5 கோடி புதிய மொபைல் இணைப்புகள் தரப்பட்டு வருகின்றன. எனவே எந்த வகையான கட்டண யுத்தம் நிறுவனங்களுக்கிடையே இருந்தாலும், தனக்கும் ஒரு இடம் உண்டு என வெளிநாட்டு நிறுவனங்கள் திட்டமிடுகின்றன.

உலகின் காஸ்ட்லி மொபைல்

பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று, உலகிலேயே அதிக விலையுள்ள மொபைல் ஒன்றை ஆர்டரின் பேரில் தயாரித்துள்ளது. இதன் மதிப்பு ரூ.14 கோடியே 70 லட்சம். இது 22 காரட் தங்கத்தில் செய்யப்பட்டது. 200 வைரக் கற்கள் இதில் பதிக்கப்பட்டுள்ளன. போனின் முகப்பில் 136 வைரங்கள் பதிக்கப்பட்டுள்ளன. ஆப்பிள் இலச்சினை 53 வைரங்கள் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

முன் பகுதியில் நேவிகேஷன் கீ அமைக்க 7.1 கேரட் வைரம் ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விலை உயர்ந்த மொபைல் போனை உருவாக்க பத்து மாதங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனை வைத்து எடுத்துச் செல்ல 7 கிலோ கிரானைட் கல்லில் ஒரு பெட்டி தயாரிக்கப்பட்டது. உள்புறமாக, விலை உயர்ந்த தோலில் வேலைப்பாடுடன் கூடிய அமைப்பு உருவாக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

ஐ போன் 3ஜி சுப்ரீம் என இது அழைக்கப்படுகிறது. இதன் உரிமையாளர் யார்? ஆஸ்திரேலிய கோடீஸ்வரர்களில் ஒருவர். இவர் தன் பெயர் பிரபலமாவதை விரும்பாததால் தன்னைப்பற்றிய தகவல்களைத் தரவில்லை.

எஸ்.எம்.எஸ். ரிலையன்ஸ் அதிரடி

சென்ற வாரம் ரிலையன்ஸ் கம்யூனிகேசன் கொடுத்த அறிவிப்பினால், மொபைல் சந்தையில் இன்னொரு யுத்தம் தொடங்க இருக்கிறது. ஒரு எஸ்.எம்.எஸ். ஒரு பைசாவில் அனுப்பலாம் என்ற சலுகையினைத் தன் வாடிக்கையாளர்களுக்கு ரிலையன்ஸ் அறிவித்துள்ளது. இதற்கு மாதம் ரூ.11 கட்டணம் செலுத்த வேண்டும். அல்லது தினசரி ரூ.1 செலுத்தி எத்தனை எஸ்.எம்.எஸ்.கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ரிலையன்ஸ் தருவதில் உள்ள சிறப்பம்சம், எந்த நெட்வொர்க் சென்றாலும் அதே கட்டணம் வசூலிக்கப்படுவதே. பி.எஸ்.என்.எல். உட்பட பல நிறுவனங்கள், முன்பு குறிப்பிட்ட காலத்தில் பிரீ பெய்ட் சிம் கார்ட் வாங்குபவர்களுக்கு, மாணவர்களுக்கு இலவச எஸ்.எம்.எஸ். 100 என்ற வகையில் திட்டங்களை அறிவித்து அமல் படுத்தி இருந்தன.

ஆனால் இப்போது ரிலையன்ஸ் அறிவித்துள்ளது தொடர்ந்த கட்டணமாக இருக்கும். இது ட்ராய் சென்ற நவம்பர் 5ல் வெளியிட்ட அறிக்கையினைத் தொடர்ந்து ஏற்பட்ட முடிவாகும். ட்ராய் இது பற்றிக் கூறுகையில் மொபைல் சர்வீஸ் நிறுவனம் ஒன்று எஸ்.எம்.எஸ். ஒன்றினை அனுப்ப ஒரு பைசாவிற்கும் குறைவாகவே செலவு செய்கிறது என அறிவித்திருந்தது. இதனைத் தொடர்ந்து வாடிக்கையாளர்கள் அமைப்பு மற்றும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ட்ராய் அமைப்பிடம் உடனடியாக எஸ்.எம்.எஸ். கட்டணத்தைக் குறைக்கச் சொல்லி முறையிட்டனர். ட்ராய் தலைவரும் இது குறித்து தீவிரமாக ஆலோசித்து முடிவு எடுப்பதாக அறிவித்திருந்தார்.

இந்த சூழ்நிலையில் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மற்ற நிறுவனங்களும் இந்த போட்டியில் இறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விநாடிக்கு ஒரு பைசா சுனாமி இப்போது உச்ச கட்டத்தில் இருக்கிறது. அடுத்த அதிரடியாக எஸ்.எம்.எஸ். கட்டணச் சலுகை வர இருக்கிறது.

டாடா டொகொமோ தரும் பிளாக் பெரி கர்வ் 8520

ஆர்.ஐ.எம். மற்றும் டாட்டா டொகொமோ இணைந்து பிளாக்பெரி கர்வ் 8520 மொபைல் போனை இந்தியாவில் விற்பனைக்குக் கொண்டுவந்துள்ளன.

ஏற்கனவே அறிமுகப்படுத்திய பிளாக் பெரி மொபைல் போன்களுக்கு வாடிக்கையாளர்கள் தந்த வரவேற்பை அடுத்து இந்த ஸ்மார்ட் போன் தரப்பட்டுள்ளதாக, டாட்டா டெலிசர்வீசஸ் துணைத்தலைவர் அறிவித்தார்.

மிக ஸ்லிம்மான, பலவித வசதிகளை ஒருங்கிணைத்துத் தரும் ஸ்மார்ட் போனாக பிளாக் பெரி கர்வ் 8520 அமைந்துள்ளது.

இதில் டச் சென்சிடிவ் ட்ராக் பேட் அமைக்கப்பட்டுள்ளது. மீடியா இயக்கத்திற்கென தனி கீகள் உள்ளன. குவெர்ட்டி கீ போர்டு டெக்ஸ்ட்டிங் பணியை எளிதாக்குகின்றன. வை–பி இணைப்பிற்கான வசதி இணைக்கப்பட்டுள்ளது. முழுமையான எச்.டி.எம்.எல். பிரவுசிங் அனுபவம் கிடைக்கிறது. தொடர்ந்து 4.5 மணி நேரம் பேசலாம். 17 நாட்கள் இதன் பேட்டரி சார்ஜ் இல்லாமல் இயங்குகிறது. இமெயில், மெசேஜிங், சோஷியல் நெட்வொர்க்கிங் இணைப்பு மற்றும் மொபைல் இன்டர்நெட் வசதிகளை வெகு வேகமாகத் தருகிறது. அத்துடன் மியூசிக் பிளேயர், வீடியோ பிளேயர் ஆகிய வசதிகளையும் கொண்டு மிகச் சிறப்பாக இயங்குகிறது. இதன் குறியீட்டு விலை ரூ. 14,990.

வந்துவிட்டது எல்.ஜி. பி.எல். 40

சென்ற வாரம் எல்.ஜி. நிறுவனம் தன்னுடைய பி.எல். 40 சாக்லேட் மொபைல் போனை இந்தியாவிற்குக் கொண்டுவரப் போகிறது என்று எழுதி இருந்தோம். அதன் விலை ரூ.25,000க்குள் இருக்கலாம் என்றும் தெரிவித்திருந்தோம்.

எழுதிய வேளையில், இந்த போனை இந்தியா விற்கு எல்.ஜி. கொண்டுவந்து விட்டது. பளபளக்கும் சிக் என்ற தோற்றத்தில் 4 அங்குல அகலத்தில் ஸ்கிராட்ச் விழ முடியாத, 800 x 345 ரெசல்யூசன் மற்றும் 21:9 ஆஸ்பெக்ட் ரேஷியோ கொண்ட ஸ்கிரீனுடன் ஜொலிக்கிறது. 3ஜி போனாக HSDPA, EDGE/GPRS தொழில் நுட்பங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

DLNA இணைந்த வை–பி, A2DP கொண்ட புளூடூத், யு.எஸ்.பி. போர்ட், A-GPS உடன் ஜி.பி.எஸ்., ஜியோ டேக்கிங் கொண்ட கூகுள் மேப்ஸ், எப்.எம். ட்ரான்ஸ் மீட்டர் கொண்ட ரேடியோ என அனைத்து பிரிவு களிலும் பல வசதிகளைக் கொண்டுள்ளது.

இதன் விலை ரூ.30,000 எனக் குறியிடப் பட்டுள்ளது.

டிப்ஸ் கதம்பம்

வேர்டில் வரி அழிக்க

வேர்ட் டாகுமெண்ட்டில் ஒரு வரி டெக்ஸ்ட்டை டைப் செய்துவிட்டீர்கள். அப்புறம் தான் தெரிகிறது. அந்த வரி தேவையில்லையே என்று. உடனே என்ன செய்யலாம்? பின்னால் உள்ள கர்சரை பேக் ஸ்பேஸ் கீ மூலம் தட தட தட் என்று தட்டிக் கொண்டே செல்லுகிறீர்களா? ஏன், சார் இந்த வேலை? வரியின் தொடக்கத்தில் கர்சரைக் கொண்டு செல்லுங்கள். பின் ஷிப்ட் + என்ட் கீகளை அழுத்துங்கள். வரியின் முடிவு வரை தேர்ந்தெடுக்கப்படும். அடுத்து பேக் ஸ்பேஸ் அல்லது டெலீட் அழுத்துங்கள். ஏன், ஸ்பேஸ் கீ அழுத்தினாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட வரி அழிக்கப்படும். மின்னஞ்சல் கடிதங்களை சுருக்கமாகவும் நேரடியாக விஷயத்தைத் தெரிவிப் பதாகவும் அமைத்திடுங்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட பைல்களை மின்னஞ்சலுடன் இணைப்பாகத் தர எண்ணினால் அவற்றை ஸிப் செய்து அனுப்பவும். அப்போது தான் கடிதத்தினைப் பெறுபவர் அனைத்து பைல்களையும் பெறுவது உறுதிப் படுத்தப்படும். இல்லை என்றால் ஒன்று கிடைத்து ஒன்று கிடைக்காமல் போகலாம்.

★ ஒன்றுக்கு மேற்பட்ட விண்டோக்களில் செயலாற்றிக் கொண்டிருக்கையில் திரையில் தோன்றும் விண்டோவினை பின்னுக்குத் தள்ளி மற்றதை முன்னுக்குக் கொண்டு வர Alt+ ESC அழுத்தவும்.

நம் விருப்ப புல்லட்

வேர்டில் உள்ள வரி ஒன்றின் நடுவே, புல்லட் போல சிறிய புள்ளி ஒன்று அமைக்க விரும்புகிறீர்கள். புல்லட் டூலைத் தேர்ந்தெடுத்தால், நீங்கள் விரும்பியபடி புல்லட் அமையவில்லை. என்ன செய்யலாம்? எந்த இடத்தில் சிறிய புள்ளியை, புல்லட் ஆக அமைக்க வேண்டுமோ, அந்த இடத்தில் கர்சரைக் கொண்டு செல்லவும். பின் நம்லாக் கீயை ஆன் செய்து, நியூமெரிக் கீ பேடில் ஆல்ட் கீயினை அழுத்தியவாறே 0183 என்ற எண்களை அழுத்தவும். புள்ளி அமைக்கப்படும்.

கண்ட்ரோல் பேனல் உங்கள் கைகளில்

நீங்கள் அடிக்கடி கண்ட்ரோல் பேனல் திறந்து பயன்படுத்துபவரா? ஒவ்வொரு முறையும் ஸ்டார்ட் கிளிக் செய்து பல பிரிவுகளைத் தேர்ந்தெடுத்துப் பின் கண்ட்ரோல் பேனல் செல்கிறீர்களா? நீங்கள் விண்டோஸ் 7 பயன்படுத்துபவராக இருந்தால் இந்த மவுஸ் அலைச்சல் தேவையில்லை. கண்ட்ரோல் பேனலைத் திறக்கும் வழியை உங்கள் டாஸ்க்பாரில் வைத்துக் கொள்ளலாம். ஸ்டார்ட் கிளிக் செய்து சர்ச் பாக்ஸில் Control Panel என டைப் செய்திடவும். கண்ட்ரோல் பேனல் ஐகான் காட்டப்படும்போது அப்படியே அதனை இழுத்து வந்து, உங்கள் டாஸ்க் பாரில் விடவும். அடுத்த முறை கண்ட்ரோல் பேனல் செல்ல எண்ணுகையில் இதனைக் கிளிக் செய்தால் போதும். எப்போதாவது இந்த ஐகான் எதற்கு டாஸ்க் பாரில் என்று எண்ணினால் இதன் மீது ரைட் கிளிக் செய்து Unpin this program from Taskbar என்பதில் கிளிக் செய்தால் போதும்.

வேர்டில் பைலைத் திறக்க

வேர்டைத் திறக்கையில் ஏற்கனவே பயன்படுத்திய பைல்களின் பட்டியலில் நாம் செட் செய்ததற் கேற்ப 4 முதல் 9 பைல்கள் வரை காட்டும். இவை 1,2,3 என வரிசைப் படுத்தப்பட்டு மெனுவின் கீழாக இருக்கும். குறிப்பிட்ட பைலைத் திறக்க மவுஸின் கர்சரை அந்த பைலின் பெயர் மீது வைத்து கிளிக் செய்வோம். இன்னொரு குறுக்கு வழியும் உள்ளது. அந்த பைலுக்கு எந்த எண் தரப்பட்டுள்ளதோ அந்த எண்ணுக்கான கீயை (1,2,3 என்றபடி) அழுத்தினால் போதும். அந்த பைல் திறக்கப்படும்.

குரோம் சிஸ்டம் நம்மை நேரடியாக இன்டர்நெட்டில் இணைத்தவாறு கம்ப்யூட்டரில் வேலை பார்க்க வைக்கும் செய்தி கேட்பதற்கே பிரமிப்பாக உள்ளது. எதிர்கால கம்ப்யூட்டர் இப்படித்தான் இருக்கும் என்பதும், பயன்பாடு வித்தியாசமாக இருக்கும் என்பது வித்தியாசமாக உள்ளது.

– கே. ஆராவமுதன், மதுரை

பயர்பாக்ஸ் வெளிவந்த நாள் முதலாய்த் தொடர்ந்து ஏதேனும் புதுமைகளையும், வசதிகளையும் தந்த வண்ணம் உள்ளது. இதன் வெற்றிக்கு இதுவே அடிப்படைக் காரணம். எதிர்காலத்திட்டங்கள் என நீங்கள் தந்திருப்பது இதனை உறுதிப்படுத்துகின்றன.

–பேரா.டி. விஜயகுமார், கோயமுத்தூர்

புதிதாய் நீங்கள் தரும் எக்ஸெல், வேர்ட் டிப்ஸ்கள் மிகப் பயனுள்ளவையாய் உள்ளன. தயவு செய்து எந்தக் காரணத்திற்காகவும் நிறுத்த வேண்டாம். குறைக்க வேண்டாம். இதில் ஜாவாவையும் சேர்த்தால் பல மாணவர்கள் பயனடைவார்கள்.

-என்.அரவிந்தன், கம். சயின்ஸ் மாணவர், சென்னை

.swf பைல் விளக்கம் அருமை. மூன்று ஆண்டுகள் கம்ப்யூட்டரில் பாடம் படித்தும் விளக்கமாகத் தெரியாமல் இருந்தேன். நன்றி.

-எஸ். ஆர். முகேஷ், திருப்பூர்

விண்டோஸ் டிஸ்பிளே தகவல்கள் ஒரு முழு புக்கில் படிக்கும் அளவிற்கு விஷயங்களைத் தந்தது. நீங்கள் தான் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தர முடியும் என்பதை நிரூபித்துள்ளது உங்கள் கட்டுரை.

– ஆர்.பவித்ரா, புதுச்சேரி

ஒவ்வொரு நிறுவனத்தின் பெயருக்குப் பின்னும் சுவாரஸ்யமான ஒரு கதை உள்ளதே. படிக்க ஆர்வமாக இருந்தது. எங்கிருந்து இந்த தகவல்கள் உங்களுக்குக் கிடைக்கிறதோ!

–என்.சந்தீப் குமார், மதுரை

தமிழில் டாகுமென்ட் தயார் செய்திடும் நான் பாண்ட் அனுப்ப பல முறை முயன்று முடியாமல் இருந்தேன். இவ்வளவு எளிதான ஒரு வழி உள்ளதைக் காட்டியுள்ளீர்கள். நன்றி.

–டாக்டர் ஆர். ரத்னகுமார், பழவந்தாங்கல்

மொபைல் குறித்து பொதுச் செய்திகள், எச்சரிக்கைகள், டிப்ஸ்கள் தரவும். எங்கள் கடிதங்களைக் கூடப் போட வேண்டாம். பயனுள்ள தகவல்களைத் தரவும். அல்லது பக்கங்களை முன்பு போல் கூட்டவும்.

–எஸ்.கே. முத்துக்குமார், பொள்ளாச்சி

கூகுள் தேடல் விஷயத்தில் சாதித்தது போல நிச்சயம் ஆப்பரேட்டிங் சிஸ்டம் விஷயத்திலும் புதுமையைக் கொண்டு வந்து சாதிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. குரோம் மக்களின் இணைய, தகவல் தொழில் நுட்ப துணை வனாக வரத்தான் போகிறது. நாமும் பார்த்து அனுபவிக்கத்தான் போகிறோம். அந்த நேரத்தில் நாங்கள் உங்கள் கட்டுரையை நினைவில் கொள்வோம்.

–சி. கலைச் செல்வி, வங்கி அலுவலர், சென்னை

சீனாவில் கம்ப்யூட்டர் குறிப்பாக இன்டர்நெட் பயன்படுத்துவது அதிகம். அதே போல திருட்டு நகல் சாப்ட்வேர் பரவுவதும் அதிகம். இந்தியாவிலும் அப்படியே. இதிலிருந்து என்ன தெரிகிறது? குறைந்த செலவில் சாப்ட்வேர் கிடைத்தால்தான் மக்கள் சரியான சாப்ட்வேர் தொகுப்பை நாடுவார்கள். நாடும் வளரும். மைக்ரோசாப்ட் முன்வருமா?

–என். கோதண்டராமன், முகப்பேர் கிழக்கு.

கம்ப்யூட்டர் விற்பனை உயர்வு

எச்.பி.முதலிடம்

ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான மூன்று மாத காலத்தில் பெர்சனல் கம்ப்யூட்டர் விற்பனை, அதற்கு முந்தைய காலாண்டினைக் காட்டிலும் 24% உயர்ந்திருந்ததாக அறிவிக்கப் பட்டுள்ளது. மொத்தம் 21 லட்சத்து 90 ஆயிரம் கம்ப்யூட்டர்கள் விற்பனை செய்யப்பட்டது.

ஆனால் இது முந்தைய ஆண்டில் இதே காலாண்டில் விற்பனை செய்யப்பட்ட கம்ப்யூட்டர்களின் எண்ணிக்கையைக் (22.59 லட்சம்) காட்டிலும் குறைவுதான்.

இந்த காலாண்டில் தான், லேப்டாப் கம்ப்யூட்டர்களின் விற்பனை, முதல் முதலாக 7 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

லேப்டாப் மற்றும் டெஸ்க்டாப் கம்ப்யூட்டர்களின் மொத்த விற்பனையில் முதலிடத்தை எச்.பி.நிறுவனம் பெற்றுள்ளது. கம்ப்யூட்டர் விற்பனைச் சந்தையில் 17.4 சதவீதம் பங்கினை இது கொண்டுள்ளது. அடுத்ததாக டெல் நிறுவனம் 11.3 சதவீதம், ஏசர் 11.1சதவீதம் பங்கைப் பெற்று, முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளன. டெஸ்க் டாப் கம்ப்யூட்டர் விற்பனையை மட்டும் கணக்கிடுகையிலும், எச்.பி.நிறுவனமே முதலிடத்தில் உள்ளது. அடுத்ததாக எச்.சி.எல்., மற்றும் ஏசர் இடம் பெற்றுள்ளன. நோட்புக் கம்ப்யூட்டர்களில் எச்.பி., டெல் நிறுவனங்களை அடுத்து ஏசர் இடம் பெற்றுள்ளது.

ட்ரான்ஸெண்ட் தரும் 64 ஜிபி மெமரி கார்ட்

நொடிக்கு 90 எம்பி தகவல்களைப் படிக்கவும், 60 எம்பி தகவல்களை எழுதவும் திறன் கொண்ட 400 x காம்பாக்ட் பிளாஷ் மெமரி கார்டுகளை, இந்தத் துறையில் சிறப்பு பெற்ற ட்ரான்ஸெண்ட் நிறுவனம் அண்மையில் விற்பனைக்கு வெளியிட்டுள்ளது. அதிக பட்சம் 64 ஜிபி கொள்ளளவு கொண்ட கார்ட்கள் உள்ளன. இதில் 13 ஆயிரம் படங்களைப் பதிந்து வைக்கலாம். மூன்று மணி நேரம் ஓடக் கூடிய முழு எச்.டி. வீடியோ படத்தினைப் பதிந்து வைக்கலாம். இந்த கார்டுகளில் ECC (Error Correction Code) என்னும் வசதி அமைக்கப்பட்டு உள்ளதால் டேட்டா பரிமாறப்படுகையில் ஏதேனும் தவறு ஏற்பட்டால், உடனே அவை சரி செய்யப்படும். இவை டிஜிட்டல் கேமரா பயன்படுத்துபவர்களுக்கு மிக உதவியாக இருக்கும். கார்டினை மாற்றாமல் அதிக எண்ணிக்கையில் தொடர்ந்து படங்களை எடுத்துப் பதிவு செய்து கொண்டே இருக்கலாம். புளூ ரே டிஸ்க்குகள் கூட அதிக பட்சம் 50 ஜிபி அளவு தான் மெமரி கொள்ளும்; எனவே இந்த பிளாஷ் மெமரி கார்டுகள் நிச்சயம் நல்ல வரவேற்பு பெறும் என்று எதிர்பார்க்கலாம். 64 ஜிபி திறன் கொண்டது ரூ.27,000, 32 ஜிபி கொண்டது ரூ. 12,800 மற்றும் 16ஜிபி கொண்டது ரூ.6,250 என விலையிடப்பட்டுள்ளது.

கூகுள் மியூசிக் சர்ச்

ஆன்லைனில் பாடல்களுக்கான ஸ்டோர்களைத் தொடங்கி நடத்துவதில் இப்போது கூகுள் நிறுவனமும் சேர்ந்துள்ளது. இதற்கென ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளதாக கூகுள் அறிவித்துள்ளது.

லாலா டாட் காம் (Lala.com) மற்றும் மை ஸ்பேஸ் தொடர்புடைய ஐ லைக் (iLike) நிறுவனங்களுடன் இந்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆன்லைனில் பாடல்களைக் கேட்டு வாங்குவதற்கான வழிகளை இவை மிக எளிதாக மாற்றி அமைத்துள்ளன. கூகுள் வழங்கும் இந்த மியூசிக் சேவை ஒன்பாக்ஸ் (One Box) என அழைக்கப்படுகிறது. இந்த தேடல் மூலம் முதலில் உங்களுக்குக் கிடைக்க இருக்கும் பாடல் நீங்கள் தேடும் பாடல் தானா என்பதனை, அதனை இயக்கிப் பார்த்து அறிந்து கொள்ளலாம். மற்ற தளங்கள் இது போன்ற சோதனையாக பாடலைக் கேட்பதை 30 வினாடிகள் என வரையறை செய்துள்ள நிலையில், கூகுள் அதிக நேரம் தருவது தன் வாடிக்கையாளர்களைத் தொடர்ந்து அனைத்து வழிகளிலும் தன்னிடத்தே வைத்துக் கொள்ளும் முயற்சிகளில் ஒன்றாக கூகுள் மேற்கொள்கிறது என்று கூறலாம்.